குமரி மாவட்டத்தில் தாமதமாக நடவு செய்த பயிர்களை காப்பாற்ற

# மார்ச் 31 வரை பாசன நீர் விநியோகம்

● குறைதீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்

● நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தாமதமாக நடவு செய்யப்பட்ட நெற்பயிர்களை காக்கும் வகையில் மார்ச் 31-ம் தேதி வரை பாசன நீர் விநியோகம் செய்யவேண்டும் என விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நாஞ்சில் கூட்டரங்கில் நேற்று மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை ஆட்சியர் பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்காக அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் பிப்ரவரி இறுதியில் நிறுத்தப்படும் என்பதால், தாமதமாக பயிரிட்ட நெற்பயிர்களை காப்பாற்ற பி.பி கால்வாய் மூலம் மார்ச் 31-ம் தேதி வரையும் தோவாளை கால்வாய் மூலம் மார்ச் 16-ம் தேதி வரையும் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக சிறப்பு கூட்டம் நடத்தி முடிவு எடுக்கப்படும் என்றார்.

வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பாக குமரி வனத்துறை கோட்ட கட்டுப்பாட்டு அறை எண் 04652-277494 -ல் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். உரிய ஆவணங்களுடன் வனத்துறை அலுவலகத்தில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

**இழப்பீடு அதிகரிக்க வேண்டும்**

வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்துக்கு இழப்பீட்டுத்தொகையை அதிகப்படுத்த வேண்டும். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பயிர் காப்பீடு, இழப்பீடு குறைபாட்டை சரிசெய்து காப்பீடு வழங்க வேண்டும். மாம்பழத்துறையாறு அணையின் பிரதான கால்வாயை தூர்வார வேண்டும். பறக்கின் கால்வாயை தூர்வாரி தண்ணீர் விட வேண்டும். நீர்வளத்துறைக்கு மட்டும் தனியாக நில அளவீட்டாளர்களை பணியமர்த்த அரசை வலியுறுத்த வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள குளங்களை தூர்வாரி வண்டல்மண்ணை விவசாய விளைநிலங்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

காப்பீடு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க குமரி மாவட்டத்தில் சேதமடைந்த நெற்பயிர் பரப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. கிராமம் வாரியாக இழப்பீடு வழங்குவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேளாண்மை ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**தூர் வார நடவடிக்கை**

மாம்பழத்துறையாறு அணையின் பிரதான கால்வாயை வரும் நிதி ஆண்டுக்கான வருடாந்திர பராமரிப்பு பணி பட்டியலில் சேர்த்து தூர் வாரும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். பறக்கின் கால்வாயை தூர்வாரிட ரூ.14 லட்சம் மதிப்பில் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசிடமிருந்து உரிய நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றதும் தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நீர்வளத்துறையின் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது, இது குறித்து அரசுக்கு தெரிவிக்கப்படும்.

குளங்களை தூர்வாரி வண்டல்மண்ணை விவசாய விளைநிலங்களுக்கு வழங்குவது தொடர்பாக அரசிதழ்களில் குளங்களின் பட்டியல் வெளியிடப்பட்டு விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேளாண்துறை மற்றும் நீராதாரதுறையினர் பதில் தெரிவித்தனர்.

தொடர்ந்து வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் ரூ.3.92 லட்சம் மதிப்பிலான விசை உழுவை இயந்திரங்களை ரூ.1.50 லட்சம் மானியத்தில் 2 பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினார்.

கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, வேளாண்மை இணை இயக்குநர் ஆல்பர்ட் ராபின்சன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஷீலா ஜாண், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கீதா மற்றும் விவசாய பிரதிநிதிகள் பங்கேற்றனர்.




↑ குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது.

“ குளங்களை தூர்வாரி வண்டல்மண்ணை விளைநிலங்களுக்கு பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும். ”



↑ கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த பருத்தி, மக்காச்சோள வயல் விழாவில் விவசாயிகள் கரிசல் பண்ணையை பார்வையிட்டனர்.

## பருத்தி, மக்காச்சோள வயல் விழா

● கோவில்பட்டி

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பருத்தி மற்றும் மக்காச்சோள வயல் விழா நேற்று நடந்தது.

வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ப.பாக்கியாத்து சாலிகா தொடங்கி வைத்து பேசும்போது, “மானாவாரி விவசாயிகள் பயனுறும் வகையில் பயிர் ரகங்களையும், தொழில்நுட்பங்களையும், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டு வருகிறது. காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப விவசாய ஆலோசனைகளையும் வழங்குகிறது. விவசாயப் பெருமக்கள் உபரி வருமானம் பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது” என்றார்.

தனியார் பருத்தி ஆலை நிர்வாக இயக்குநர் ஹரிஹர சுப்பிரமணியன், நீண்ட இழைப் பருத்தியின் தேவை மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து எடுத்துக்கூறினார். உதவிப் பேராசிரியர் மணிகண்டன், மானாவாரி பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் மண் நீர் சேகரிப்பு முறைகளை விளக்கினார்.

தொடர்ந்து கரிசல் பண்ணையில் அமைந்துள்ள நவீன பருத்தி, மக்காச்சோளம், சோளம் மற்றும் பயறு வகைகளின் தொழில்நுட்ப செயல்விளக்க பூங்காவை விவசாயிகள் பார்வையிட்டனர்.

உதவிப் பேராசிரியர்கள் மனோகரன், சஞ்சீவ்குமார் மற்றும் தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வருந்துகிறோம்!

இரங்கல்

ஆண்டு நினைவு நாள்

35-ம் ஆண்டு நினைவு நாள்



திரு. T.A.L.C.L. ஆறுமுகசாமி நாடார் தென்காசி

தங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்

சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கில்

## சார்பு ஆய்வாளர் ஜாமீன் மனு தள்ளுபடி

● மதுரை

சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கில் சார்பு ஆய்வாளர் ரகுகணேஷ் ஜாமீன் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வணிகர்களான ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை 2020-ம் ஆண்டு ஜூன் 19-ம் தேதி இரவு விசாரணைக்காக சாத்தான்குளம் போலீஸார் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இரவு முழுவதும் இருவரையும் போலீஸார் தாக்கியுள்ளனர். இதில் தந்தையும், மகனும் உயிரிழந்தனர்.

இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமை காவலர்கள் முருகன், சாமிதுரை, காவலர்கள் முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து ஆகியோரை சிபிஐ அதிகாரிகள் கைது செய்தனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.



கைதான காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 பேரும் கைதான நாளிலிருந்து மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஜாமீன் கேட்டு மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடியானது.

இந்நிலையில் சார்பு ஆய்வாளர் ரகு கணேஷ் ஜாமீன் கோரி மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அதில், சிறையில் எனக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. தற்போது அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது. இதனால் மருத்துவ காரணங்களுக்காக எனக்கு இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி தமிழரசி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சிபிஐ தரப்பில், ரகு கணேஷின் மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் ரகு கணேஷுக்கு இதய பிரச்சினை உள்ளது. அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு போதிய மருத்துவ வசதி உள்ளது. ரகுகணேசுக்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டியதில்லை எனக் கூறப்பட்டிருந்தது.

இதையேற்று ரகு கணேஷின் ஜாமீன் மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

போக்குவரத்துக் கழக ஊழியர் கொலை வழக்கில்

## ராணுவ வீரரை பிடிக்க போலீஸார் நடவடிக்கை

● நாகர்கோவில்

குமரி மாவட்டம் திங்கள்நகர் அருகே மைலோடு பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலய பாதிரியார் இல்லத்தில் கடந்த 20-ம் தேதி போக்குவரத்துக் கழக ஊழியரும், நாம் தமிழர் கட்சி நிர்வாகியுமான சேவியர் குமார் கொலை செய்யப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக 15 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இவ்வழக்கில் தொடர்புடைய திமுக முன்னாள் நிர்வாகி ரமேஷ்பாபு, பாதிரியார் ராபின்சன் ஆகியோர் நீதிமன்றங்களில் சரண் அடைந்தனர். அவர்களை காவலில் எடுத்து விசாரித்த போலீஸார், வாக்கு மூலங்களை வீடியோ பதிவு செய்தனர்.

இக்கொலை தொடர்பாக மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தேடப்பட்ட உடற்கல்வி ஆசிரியர் சோனீஷ் தக்கலை நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவரை காவலில் எடுத்து விசாரிக்க போலீஸார் இரணியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். அவரை 2 நாட்கள் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதைத்தொடர்ந்து சோனீசை போலீஸார் நேற்று முன்தினம் மாலையில் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

இக்கொலை வழக்கில் தலைமறைவாக உள்ள ராணுவ வீரர் எட்வின் ஜோஸ் என்பவரை தனிப்படை போலீஸார் தேடி வருகின்றனர்.

fincare Small Finance Bank

**ஃபின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 301-306, 3வது தளம், அபிஜீத்-V, மேயர்ஸ் பங்களா எதிரில், லா கார்டன் சாலை, மிதாகாளி, அகமதாபாத்-380006, Ph: +91-79-40011000.

தலைமை அலுவலகம்: # 835/39, 5வது தளம், பிரேன் மெர்கியூரி, கைகொண்டஹல்லி, சார்தாபூர் பிரதான சாலை, பெங்களூரு- 560035, கர்நாடகா. போன்: +91-80-42504444. www.fincarebank.com. CIN No.U67120GJ1995PLC025373

**இணைப்பு IV [விதி 8(1) சுவாதீன அறிவிப்பு**

ஃபின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54 of 2002) பிரிவு 13(12)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகளில், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள், அடமானதாரர்கள், இனை-மனுதாரர்கள் ஆகியோருக்கு கீழ்குறிப்பிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் கீழ்க்குறிப்பிட்ட பாக்கித் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேற்படி பாக்கித்தொகையை கடன்தாரர்கள், அடமானதாரர்கள், இணை-மனுதாரர்கள் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13 துனை பிரிவு 4 மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 9-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **சிம்போலிக் சுவாதீனம்** செய்துள்ளார்.

**கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13 துணை பிரிவு (8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

கடன்தாரர்கள், அடமானதாரர்கள், இணை-மனுதாரர்களுக்கு குறிப்பாகவும், பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப் படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து/சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **ஃபின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**-க்கு செலுத்தப்பட வேண்டிய கீழ்குறிப்பிட்ட பாக்கித்தொகை மற்றும் கடனுக்கான வட்டி உட்பட குறிப்பிடப்பட்ட வட்டி, தொகைகள், கட்டணங்கள், செலவினங்கள் இதரவை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

| வ. எண். | கடன்தாரர்கள், அடமானதாரர்கள், இணை-மனுதாரர்கள் மற்றும் சம்மதித்தவர்கள் | சுவாதீன நாள் | மொத்த நிலுவை தொகை |
|---|---|---|---|
| 1 | 1) திரு./திருமதி. ஜெயமுருகன் S, 2) திரு./திருமதி. லெனின் பேபி J, கோரிக்கை அறிவிப்பு நாள்: 13.02.2023 கடன் கணக்கு எண். 20660000589325 | சுவாதீனம் எடுத்த நாள்: 05.02.2024 | 13.02.2023 அன்று ரூ.12,26,821/- (மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் உட்பட தொகை செலுத்தும் நாள்வரை |
| | அசையா சொத்து விவரம் : தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை SRO, சாயர்புரம் கிராமம், சாயர்புரம் டவுன் பஞ்சாயத்து வார்டு எண்.6, காமராஜ் தெரு, அயன் புஞ்சை ச.எண். 177/40 அளவுகள் 8 சென்ட்ஸ் பரப்பளவு மேற்கு பக்கம் 3.50 சென்ட் நிலம் மற்றும் வீடு, கதவு எண்.6/4 மற்றும் அதன் அனைத்து எளிதான உரிமைகள், அளவுகள் வடக்கு தெற்கு - மேற்கு பக்கம் 67 அடி மற்றும் கிழக்கு பக்கம் 67.5 அடி, கிழக்கு மேற்கு - வடக்கு பக்கம் 16 அடி மற்றும் தெற்கு பக்கம் 16.5 அடி, மொத்த பரப்பளவு 1525 சதுர அடி (3.50 சென்ட்). கிழக்கில் : சமுத்திரகனி அம்மாள் அவர்களின் சொத்து, மேற்கில் : முருகன் அவர்களின் சொத்து மற்றும் வடக்கு-தெற்கு பாதை, வடக்கில் : கிழக்கு மேற்கு பாதை, தெற்கில் : கோபால் அவர்களின் சொத்து. | | |
| 2 | 1) திரு./திருமதி. முத்துகுமார் கருப்பசாமி, 2) திரு./திருமதி. கமலாதேவி S, கோரிக்கை அறிவிப்பு நாள்: 05.08.2022 கடன் கணக்கு எண். 20630000003000 & 21630000000013 | சுவாதீனம் எடுத்த நாள்: 05.02.2024 | 05.08.2022 அன்று ரூ.20,20,591/- (மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் உட்பட தொகை செலுத்தும் நாள்வரை |
| | அசையா சொத்து விவரம் : தூத்துக்குடி பதிவு மாவட்டம் மற்றும் ஒட்டபிடாரம் சார்-பதிவாளர் எல்லை, ஒட்டபிடாரம் தாலுகா, ஒட்டபிடாரம் கிராமம், எஸ்.எப்.எண். 7378/1ஏ1ஏ - 0.54.0 ஹெக். எஸ்.எப். எண். 761/1ஏ - 1.49.5 ஹெக். எஸ்.எப்.எண். 761/4ஏ - 0.93.0 ஹெக். எஸ்.எப். 762/1ஏ2 - 4.87.0 ஹெக். மொத்தம் 19 ஏக்கர்ஸ் மற்றும் 35 சென்ட்ஸ், ஜேம்ஸ் நேவிஸ் ராஜகுமாரி, வனஜா மங்களசெல்வி தவிர்த்து எங்கள் நிலம் 8 ஏக்கர்ஸ் மற்றும் 89 சென்ட்ஸ், மீதமுள்ள நிலம் 11 ஏக்கர்ஸ் 46 சென்ட்ஸ் 1 முதல் 254 வீட்டு சைட் மனைகளாக மாற்றப்பட்டது மற்றும் லேஅவுட் ஒப்புதல் எண். 2 நாள் 2.05.2001, இதில் கேள்விகுறிய சொத்து பரப்பு 2178 சதுர அடி சமமான 202.341 சதுர மீட்டர், மனை எண். 163 மற்றும் பின்வரும் எல்லைகள். அளவுகள் கிழக்கு மேற்கு (வடக்கு மற்றும் தெற்கு) 33 அடி, வடக்கு தெற்கு (கிழக்கு மற்றும் மேற்கு) 66 அடி ஏரியா 2178 சதுர அடி சமமான 202.341 சதுர மீட்டர் சமமான 5 சென்ட்ஸ் வீடு மற்றும் கதவு எண்.1/177 மற்றும் அதனை அனைத்து உபகரணங்கள், இதர. மேற்குறிப்பிட்ட சொத்தானது ச.எண்கள். 761/4ஏ1ஏ1ஏ1, 761/1ஏ1ஏ1ஏ1, 738/1ஏ1ஏ1ஏ1ஏ1, ஒட்டபிடாரம் பஞ்சாயத்து போர்ட் மற்றும் யூனியன் எல்லைகளுக்குட்பட்டது. கிழக்கில் : மனை எண்.162, மேற்கில் : மனை எண்.164, வடக்கில் : 20 அடி கிழக்கு மேற்கு பாதை, தெற்கில் : மனை எண்.138. | | |

நாள் : 09.02.2024
இடம் : தூத்துக்குடி

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஃபின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

**CHANGE OF NAME**

I, **ORAL RABERT D,** S/o.DEVARAJ, born on 13.02.1961, residing at 17-129B, PARAPPUVILAI, PALAPPALLAM POST, KANYAKUMARI DISTRICT, TAMILNADU, PINCODE - 629159. shall henceforth be known as **ORAL ROBERT D.**

ORAL RABERT D

ERANIEL
05.02.2024

பொது

பொது அறிவிப்பு

**தவறிவிட்டது**

வெளியூர் செல்வதற்காக குருக்கள்பட்டி பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது எனது 12ஆம் வகுப்பு ஒரிஜினல் பள்ளி மாற்று சான்றிதழ் (2019–2020, கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சங்கரன்கோவில்) வைத்திருந்த பை காணாமல் போய்விட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

பா.கோபிநாத்,
த/பெ.பாலசுப்பிரமணியன்,
க.எண்.51, கீழத்தெரு,
குருக்கள்பட்டி கிராமம்
சங்கரன்கோவில் வட்டம் –627953
செல்: 9344445345

**PUBLIC NOTICE**

1, hitherto known as R. MANI alias R. MANI YADAV alias SETHU RAMALINGAM alias MANI R S/o of Shri RAMAN KONAR permanent resident of No 4/263, 5TH Cross Street, Santhi Nagar, Palayamkottai, Tirunelveli, Tamil Nadu-627002 and at present residing at RZ-3A/4, Indra Park, Street No. 22, Palam Colony, New Delhi-110045 have changed my name and shall hereafter be known as SETHU RAMALINGAM alias MANI R.

சிறுத்தை குட்டிக்கு வைரஸ் தொற்று பாதிப்பு

## குமரி மலையோர கிராமங்களில் நாய், பூனைகளுக்கு தடுப்பூசி

● நாகர்கோவில்

குமரி மாவட்டம் சிற்றாறு சிலோன் காலனி பகுதியில் சோர்வுடன் சுற்றித்திரிந்த 4 மாதமான சிறுத்தை குட்டியை வனத்துறையினர் மீட்டு மருத்துவக் குழு மூலம் சிகிச்சை அளித்தனர்.

சிறுத்தைக் குட்டியின் உமிழ்நீர், ரத்த மாதிரியை பரிசோதனை செய்தபோது, அதற்கு கனைன் டிஸ்டெம்பர் என்ற வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்த வைரஸ் விலங்குகளின் சுவாச மண்டலம், குடல். இரைப்பை மற்றும் நரம்பு மண்டலங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

இதனால் அந் சிறுத்தை குட்டியை பேச்சிப்பாறை பகுதி யில் கூண்டில் அடைத்து வைத்து வனத்துறை மருத்துவ குழுவினர் ஒரு வாரமாக தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதனால் அதன் உடல் நிலையில் முன்னேற்றம் இருந் தாலும் அவ்வப்போது சிறுத்தை குட்டி சோர்வாக இருப்பதாகவும், அதன் தாய் மற்றும் பிற விலங்குகளுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவும் பேச்சிப்பாறை, சிற்றாறு பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.



↑ குமரி வனத்துறையினரின் கண்காணிப்பில் வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வரும் சிறுத்தை குட்டி.

இதற்கிடையே குமரி வனப்பகுதியில் வைரஸ் தொற்று பரவாமல் இருக்கும் வகையில் சிற்றாறு சிலோன் காலனி, ஜீரோ பாயின்ட், வலிய ஏலா, முல்லமுத்தன்கரை, புரையிடம், பெருங்குருவி, அடகாடு பகுதி, மூக்கரைக்கல், மயிலார், லேபர் காலனி மற்றும் கேரள-குமரி எல்லை பகுதி கிராமங்களில் நாய், பூனை உள்ளிட்ட செல்லப் பிராணிகளுக்கு வனத்துறை சார்பில் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

இன்றும், நாளையும் களியல், பெருஞ்சாணி மற்றும் பிற மலையோர கிராமங்களில் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் அருகில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில்-629001.

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 10.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித்தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1658210180000036 / 1658218860000001<br>1.ராஜவேல் செல்வராஜ்<br>2.சூரியா சுபா | (I) 30.04.2022<br>(ii) 17.04.2022 அன்றுள்ளபடி ₹ 30,45,662/- (ரூபாய் முப்பது லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து அறுநூற்று அறுபத்திரண்டு மட்டும்)<br>(ii) 22.09.2022 (அடையாளபூர்வ) & 24.11.2023 (நேரடியான) | ₹ 39,45,578/- (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து ஐநூற்று எழுபத்து எட்டு மட்டும்) | ₹ 40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) | ₹ 4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) |

**சொத்து விவரம்:** கன்னியாகுமரி பதிவு மாவட்டம் மற்றும் இரணியல் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.8076A, புதிய சர்வே எண்.538/11, பட்டா எண்.656, தல்லாக்குளம் கிராமம், தற்போது காக்கொத்துதலை கிராமம், கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 8 சென்ட் (323.76 சதுர மீட்டர்) சொத்து. எல்லைகள்: கிழக்கு: குளம், மேற்கு: மேல்கரை தம்பிசார்-க்கு சொந்தமான சொத்து, வடக்கு: ரோடு, தெற்கு: மேல்கரை தம்பிசார்-க்கு சொந்தமான சொத்து.

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 15.03.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **14.03.2024** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **13.03.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: 95512 77444, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222

இ-ஏலமானது “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob.No. 98138 87931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 09.02.2024
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).